**மண்முனை மேற்கு பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மண்முனை மேற்கு பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மண்முனை மேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 14,000,000 பெறுமதியான வவுசரின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் சபையின் 07 நூலகங்களுக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 558,170 பெறுமதியான 2,450 புத்தகங்கள் மற்றும் மீளாய்வாண்டில் விலை குறிப்பிடப்படாத 158 புத்தகங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் மேற்குறித்த தவறுகள் திருத்தப்படும். | நன்கொடைப் புத்தகங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் சபைக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்ற லினோவா டெப் ஒன்றும் மற்றும் 500 லீட்டர் கொள்ளளவுள்ள 08 நீர்த்தாங்கிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | நன்கொடைச் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 21,076,222 பெறுமதியான 04 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பற்றிய பதிவுகள் பராமரிக்கப்பட்டு, குறைபாடுகள் சரி செய்யப்படுகின்றன. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | (i) இல.371(2)(ஆ) | கடந்த காலங்களில் சபையின் திண்மக்கழிவு நிலையம் தொடர்பில் வழங்கப்பட்ட ரூபா 2,914,548 பெறுமதியான 41 முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு 05 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் நிதியாண்டில் அவற்றை இனங்கண்டு சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) இல.571(1), (2) & (3) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 13,581,977 பெறுமதியான 22 வைப்புக்களை சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்களை உரிய நபர்களுக்கு திருப்பி கொடுப்பதற்கு | காலங்கடந்த வைப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அல்லது வருமானக் கணக்கிக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 12,972,615 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 19,429,389 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 722,425 | 722,425 | 514,100 | 208,325 | - | - | - | - |
| வாடகை | 4,004,000 | 7,454,953 | 7,316,950 | 138,003 | 4,184,600 | 4,218,452 | 40,080,450 | 138,002 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,213,000 | 2,683,892 | 1,471,532 | 1,212,360 | 1,189,000 | 2,426,754 | 1,214,394 | 1,212,360 |
| ஏனைய வருமானம் | 4,012,500 | 4,544,581 | 3,939,059 | 605,522 | 16,223,000 | 32,315,740 | 32,769,093 | 374,952 |
| | 9,951,925 | 15,405,851 | 13,241,641 | 2,164,210 | 21,596,600 | 38,960,946 | 74,063,937 | 1,725,314 |

## 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **ஆதனவரி** | | |
| | சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட 08 கிராமங்களில் அறவிடப்பட வேண்டிய வீதவரி நிலுவையான ரூபா 69,415 தொகையினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி நிலுவை தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வீதவரி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | உலக தரிசன தொண்டு நிறுவனத்தினால் (World Vision) தாபிக்கப்பட்ட கரையாக்கன்தீவு குடிநீர் வழங்கல் செயற்திட்டதிற்கு சபையினால் நீர் வழங்கியமை தொடர்பில் 207 நபர்களிடமிருந்து அறவிடவேண்டிய நீர்கட்டணமான ரூபா 1,569,062 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கிராம மக்களின் அக்கறையின்மை மற்றும் அக்கிராமத்திற்குரிய சனசமூக நிலையத்தின் அசட்டையினம் காரணமாக பெருந்தொகை கட்டணம் அறவிடப்படாமல் நிலுவையிள்ளது. | நீர்கட்டண நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவரும் இனங்காணப்படாத கடன்கொடுனர் ஒருவருக்கு செலுத்தவேண்டிய ரூபா 1,873,377 தொகையினை கடன் வழங்குனரை இனங்கண்டு வழங்குவதற்கு அல்லது சபையின் வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் தொடர்பாக எவ்வித பதிவேடுகளும் இன்மையால் இத் தொகையினை உரிய முறையில் சீர் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. | கடன் வழங்குனருக்கு செலுத்தவேண்டிய தொகையினை செலுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் பிரஜைகள் பட்டயத்தின் (Citizen Charter) பிரகாரம், 14 நாட்களுக்குள் கட்டிட அனுமதியானது வழங்கப்பட வேண்டியிருந்தும், மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற 44 கட்டிட விண்ணப்பங்களில் 15 கட்டிட விண்ணப்பங்ளிற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்துடன் 08 கட்டிடங்களுக்கான அனுமதியானது 03 தொடக்கம் 07 மாத இடைவெளி வீச்சில் சபையினால் வழங்கப்பட்டிருந்தன. | எதிர்வரும் காலத்தில் 14 நாட்களுக்குள் கட்டிட அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டிட அனுமதியினை குறித்த காலப்பகுதியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2003 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் ரூபா 120,940 வட்டி வருமானத்தினை பெற்றுத்தந்த தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக் கணக்கில் காணப்படும் ரூபா 500,000 தொகையினை 19 வருடங்களாக நிலையான வைப்புக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமையினால் சபையானது அண்ணளவாக ரூபா 1,375,000 வட்டி வருமானத்தினை இழந்துள்ளது. | 2024ஆம் நிதியாண்டில் இத் தொகையினை நிலையான வைப்பு கணக்கிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நீண்டகாலமாக சேமிப்புக் கணக்கிலுள்ள தொகையினை நிலையான வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 134 இன் பிரகாரம், அசைவற்ற ஆதனத்தின் ஆண்டுப் பெறுமதி மீதே வீதவரிகள் அறவிடப்பட வேண்டியிருந்தும் சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட 08 கிராமங்களிலுள்ள 6,425 அசைவற்ற ஆதனங்களுக்கு பெறுமதிகள் விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பிடப்படாமல் சபையின் தற்காலிக மதிப்பீட்டினூடாக வீதவரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | வரி மதிப்பீட்டு திணைக்களத்தின் தாமதம் காரணமாகவே சபையினால் தற்காலிக வரி மதிப்பீட்டின் படி ஆதன வரி அறவீடு செய்யப்படுகின்றது. | அசைவற்ற ஆதனத்தின் ஆண்டுப் பெறுமதியின் மீதே வீதவரிகள் அறவிடப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 63.7 ஹெக்டேயர் பரப்பளவுகளைக் கொண்ட 75 காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காணிகளுக்கு உரிமை கோரி உள்ளூராட்சி ஆணையாளரூடாக பிரதேச செயலாளருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. | காணிகளின் உரிமையினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 05 உழவு இயந்திரங்கள், 02 இழுவைப் பெட்டி, பவுசர் மற்றும் வீதி உருளை என்பன நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன், அதனை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 10 வருடங்களிற்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களினை ஏல விற்பனை செய்வதற்கான அனுமதியானது இதுவரை வழங்கப்படாமையினால் அவற்றினை சபையிலிருந்து அகற்ற இயலாதுள்ளது. | வாகனங்களை திருத்திப் பயன்படுத்த அல்லது பயன்படுத்த முடியாதவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வேறு அரச நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்ற வாகனங்கள், இழுவைப் பெட்டிகள் மற்றும் பவுசர்கள் உள்ளடங்கலாக 21 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களிற்கான பெயர் உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவற்றுக்கான உரிமை மாற்றக் கோரிக்கையானது உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சபையினால் பயன்படுத்தப்படு கின்ற நன்கொடை வாகனங்களின் உரிமையினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டில் சேதனைப் பசளை தயாரிப்புக்காக ஆளுநர் நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 289,250 பெறுமதியான மல்டி சொப்பர் இயந்திரத்தினை (Multi Chopper Machine) பயன்படுத்துவதற்கு 02 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வருடம் குறித்த இயந்திரத்தினைப் பயன்படுத்தி பசளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்படும். | பசளை தயாரிப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்ட மல்டி சொப்பர் இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**<br>ஆரம்பநிலைமட்டத்தில் 12 பதவி வெற்றிடங்களும் இரண்டாம் நிலை மட்டத்தில் 04 பதவி வெற்றிடங்களுமாக மொத்தமாக 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன. | நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வெற்றிடம் பூரணப்படுத்தப்பட வில்லை. | ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **சிபார்சு** |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க 03 வியாபார நிறுவனங்கள் காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மேற்குறிப்படப்பட்ட சட்டப் பிரமாணங்கள் மற்றும் 2022 சனவரி 27 ஆம் திகதியிடப்பட்ட 2264/18 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியின் ''ஆ'' பிரிவின் பிரகாரம், 23 வியாபார நிறுவனங்கள் மற்றும் அரசடிச்சேனை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் என்பன சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினைப் பெறவும், புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். | வியாபார நிறுவனங்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை புதுப்பிக்கவும், திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |